கடந்த ஏழு ஆண்டுகளில் பல லட்சம் கோடி ரூபாய் வரி வருவாயை மத்திய அரசு ஈட்டியுள்ளது.

இன்று எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில், அரசு சார்பாக, சரக்கு மற்றும் சேவை வரி குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**>>>>><<<<<**

கத்தார் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடினார்.

அந்நாட்டு பிரதமர் திரு. **Mohammed Bin Abdul Rahman Bin Jassim Al Thani** **–**ஐ தோஹாவில் சந்தித்து பேசினார்.

அப்போது பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

அரசியல், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி தொழில்நுட்பம், கலாச்சாரம் மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகியவை குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

மேலும், சர்வதேச நிகழ்வுகள் குறித்தும் அவர் விவாதித்தனர்.

காஸாவின் தற்போதைய நிலைமை குறித்து, கத்தார் பிரதமர், திரு. ஜெய்சங்கரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்தியா – கத்தார் இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான சந்திப்பாக இது இருந்தது என்று திரு. ஜெய்சங்கர் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் தங்குமிடங்களை ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஸ்ரீநகர் அருகேயுள்ள **Panthachowk–**ல் அமைந்துள்ள முகாமை நேரில் பார்வையிட்டார்.

இதற்கிடையே, அடுத்த ஐந்து நாட்களுக்கு அங்கு தொடர் மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அஸ்ஸாம் மாநிலத்திலும் பெய்து வரும் கனமழை காரணமாக, பெரும்பாலான இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால், 12 மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 62 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுவரை மழை தொடர்பான சம்பவங்களில் 2 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரம்மபுத்திரா நதியில் வெள்ளம் அபாய கட்டத்தை தாண்டி செல்கிறது.

இந்நிலையில், மழை வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள திப்ருகர் தொகுதியில் மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் ஆய்வு மேற்கொண்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், மழை காரணமாக, நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் தாலுகாக்களில் உள்ள பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அடுத்த 3 மணிநேரத்தில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

